தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஐக்கிய இராச்சியக் கிளை
Tamil Education Development Council - United Kingdom
020 8432 6999
07771 753525
admin@tedc.org.uk
www.tedc.org.uk

31/05/2025

தமிழர் கல்வி மேம்பாட்டுப்பேரவை ஐக்கியராச்சியக் கிளையின் கலை பண்பாட்டுப் பிரிவினால் நடாத்தப்படும்

“**செங்காந்தள் கலைச் சமர் 2025**”

## நாடகம்

**சிறுவர் நாடகம் ( 06-12 அகவை ) (01/09/2018 – 31/08/2014)**

சிறுவர்களின் அறிவு வளர்ச்சிக்கேற்பவும் வயது வளர்ச்சிக்கேற்பவும் அவர்களின் கலைத்திறனை வளர்க்கும் நிலையிலும் அமைவனவே சிறுவர் நாடகங்கள்.

சிறுவர்கள் அறிவைச் சேர்க்கும் நிலையில் உள்ளவர்கள்; பெரியவர்கள் அறிவைக் கொடுக்கும் நிலையிலும் அனுபவிக்கும் நிலையிலும் உள்ளவர்கள். எனவே சிறுவர் நாடகங்களுக்கும் பெரியவர் நாடகங்களுக்கும் தரத்தில் மிகுந்த வேறுபாடுண்டு. அறிவைத் திரட்டலும், கலைத்திறனில் சுடர் விடுதலும் சிறுவர் நாடகங்களில் ஒருசேர வெளிப்பட வேண்டும்.

வியப்பு, மகிழ்ச்சி, கொண்டாட்டம், ஆரவாரம் ஆகியன சிறுவர் நாடகங்களில் முக்கியப் பங்கினை வகிக்க வேண்டும்.

### 1. வேரைத்தேடும் பூச்செடி

(வேரைத்தேடும் பூஞ்சிட்டு)

தமிழீழத்தில் இருந்து இடம்பெயர்ந்து லண்டனுக்கு வந்த தம்பதிகளுக்கு ஒரு பெண் குழந்தை பிறக்கிறது. அவள் வாழும் நாட்களில் அவளது எந்த உறவுகள் பற்றியும் பெற்றோர் அவளுக்கு அறியத்தரவில்லை. அவள் தமிழ் கற்க தமிழ்ப்பள்ளி செல்கிறாள். அங்கு ஒப்படை என்ற வேலைத்திட்டத்தை தமிழ் ஆசிரியர் அறிமுகப்படுத்துகிறார். அதில் குடும்ப உறவுகள் பற்றி படம் வரைந்து வருமாறு ஆசிரியர் பணிக்கிறார். இதுவரை தமது உறவுகள் பற்றி தெரியாத அச்சிறுமி தன் பெற்றோரை இது பற்றி கேட்கிறாள். பெற்றோரின் விருப்பத்திற்கு மாறாக காதல் திருமணம் செய்து தம் உறவுகளை பிரிந்த



Registered office address: 162 Franciscan Road, London SW17 8HH
Company Reg No: 09147012

நிலையில் வாழும் இவர்கள் முதல் தடவையாக சிறுமியின் தாத்தா பாட்டி பெரியப்பா பெரியம்மா சித்தப்பா சின்னம்மா மாமா மாமி ஆசையப்பா ஆசையம்மா அவர்கள் தம் பிள்ளைகளைப் பற்றி விரிவாக எடுத்து உரைக்கிறார்கள். இது கேட்ட அச்சிறுமி அவர்களைக் காண அவர்களுடன் உரையாட மிகுந்த ஆவல் கொள்கிறாள்.

அடுத்த கோடை விடுமுறைக்கு தன்னை தாயகம் அழைத்துச் செல்லுமாறு பெற்றோரை வற்புறுத்துகிறாள். பெற்றோரும் வேறு வழியின்றி அழைத்துச் செல்கின்றனர். தாயகத்தில் இவர்களது உறவுகள் அனைத்து கோபதாபங்களையும் மறந்து அதி வாஞ்சையுடன் இவர்களை வரவேற்கின்றனர். சிறுமிக்கு முத்தமழை பொழிந்து தம் பேரன்பைக் காட்டுகின்றனர். இவர்களது பாசத்தால் சிறுமி திக்குமுக்காடிப் போகிறாள். நேரத்திற்கு ஓர் உணவு புதுப்புது இடங்கள் வகை வகை விளையாட்டுகள் குலதெய்வ வழிபாடு பொங்கல் கடற்கரை மீன் சந்தை மாட்டு வண்டி ஆழ்கிணறு இராணுவம் நெல்வயல்கள் ஆடு மாடு நாய் பூனை இப்படி அதிசயத்திற்கு மேல் அதிசயமாய் சிறுமி திக்குமுக்காடுகிறாள். தன் வாழ்வின் சொர்க்கமென எண்ணுகிறாள். பிரியும் வேளை வருகையில் அவர்கள் கண்ணீர் மல்க வழியனுப்புகிறார்கள். இதுவே கதையின் மூலம்.

### 2. முள்ளிவாய்க்கால் கஞ்சி

போர் தின்று தீர்த்த எஞ்சிய நிலமாக, மரணமும் குருதியும் பழக்கமாகிப் போன ஒருடகமாக, ஒட்டுமொத்தத் துயரத்தையும் தாங்கியபடி முள்ளிவாய்க்கால் எனும் தமிழீழக் கிராமம் செய்வதறியாது இருந்த காலத்தில், எறிகணைகளும் பல்குழல் பீரேங்கிகளும் தமிழ் மக்களின் உடல்களை துளைத்தும், முறித்தும் அறுத்தும் சென்ற தருணத்தில் வயிற்றுப்பசியும் தாங்கொணாத் துயரைத் தந்தவண்ணமே இருந்தது.

அடிப்படை வசதிகளற்ற சிறுநிலத்தில் பல்லாயிரக்கணக்கான மக்களின் பசியைப் போக்க இயலாத சந்தர்ப்பத்தில் இருக்கும் அரிசியைக் கொண்டு கஞ்சி காய்ச்சி அனைவரின் பசியைப் போக்க அரும்பாடுபட்டனர். அந்தக் கஞ்சிக்காய் வரிசையில் நின்ற தருணங்களில்கூட எறிகணைகள் வீழ்ந்து பல சிறு பிள்ளைகளும் இறப்பைத் தழுவினர். இத்துன்ப நிகழ்வை நம் வாழ்நாளில் மறக்கமுடியாத வலியாகும். இவ்வாறானதொரு துன்ப நிகழ்வை எமது வாழிடச்சிறார்கள் விளங்கிக் கொள்ளும் வகையில் நாடகமாக அமைத்தல் வேண்டும்.

### 3. தமிழர் பண்பாடும் வாழிடதேசமும்

பொதுவாக புலம்பெயர்தேசத்தில் வாழ்கின்ற பல இனக்குழுமங்கள் தமக்கான அடையாளமாக அவர்தம் பண்பாட்டை பெரும்பாலும் கடைப்பிடித்து வாழ்கின்றமை குறிப்பிடத்தக்கது. அந்தவகையில் தமிழர்களும் வாழிடதேசத்தில் நிலைபெற்று நான்கைந்து தலைமுறையாக வாழ்ந்து வருகின்றனர். அவ்வாறான தலைமுறையினர் தமிழர் பண்பாட்டைப் பின்பற்றி வாழ்தலில் எதிர்நோக்கும் முரண்களை விளக்கி, எங்கு இருப்பினும் தமிழர் பண்பாட்டோடு வாழ்தலே சிறப்பு என்பதை விளக்குவதாக இந்நாடகம் அமைதல் வேண்டும்.

020 8432 6999
07771 753525
admin@tedc.org.uk
www.tedc.org.uk

### 4. தமிழ் வீரம் மடியாது

புறநானூற்றுத் தமிழர்களின் வீரம் காலம் கடந்தும் வாழ்வதுபோல் எம் மாவீரர்களது வீரமும் தியாகமும் காலம் கடந்தும் வாழ வேண்டும். அந்த வீரவரலாற்றைப் பறைசாற்றுவதாக எதிர்காலத் தலைமுறைக்கு எடுத்துச் செல்வதாயின் எமது வீரம் செறிந்த போராட்ட வடிவங்கள் ஆவணப்படுத்தப்பட வேண்டும், எழுத்து வடிவம் பெறவேண்டும், கலைவடிகளில் சித்தரிக்கப்பட்டு காலம் காலமாக கடத்தப்படவேண்டும் என்ற எண்ணக்கரு பார்வையாளர்களின் மனதில் தோன்ற வேண்டும் ஏ்ன்ற பொருளில் நாடகம் இருக்க வேண்டும்.

### 5. கூடி வாழ்வோம்

பாரம்பரியமாக கூட்டுக் குடும்பங்களாக ஊராக உறவுகளாக ஒருவரில் ஒருவர் அக்கறையோடும் உரிமையோடும் வாழ்ந்த காலத்தில் பண்பட்ட இனமாக வாழ்ந்து வந்தோம். தமிழின அழிப்பின் உச்சத்தால் நாம் உயிராக நேசித்த தாயகத்தை விட்டுப் புலம்பெயர்ந்து இன்று எமது இனம் சிதறிக் கிடக்கின்றது. கல்வி,வியாபாரம் மற்றும் வேலை போன்ற கரணியங்களால் புலம்பெயர் நாட்டின் எந்த மூலையிலும் சென்று குடியேறும் மக்கள் இளைய தலைமுறையின் எதிர்காலத்தை பிற இனங்களுக்குள் கரைக்க வேண்டிய துற்பாக்கிய நிலை ஏற்படும் இதனால் நமது இனத்திற்கு மிகப்பெரிய பாதிப்பு ஏற்படும். இவ்வாறான இன்னல்களைத் தவிர்ப்பதற்கு எம்மவர்கள் செறிந்துவாழும் இடங்களில் கூடிவாழ்வோம்.
எம்மின எதிரிகள் தாயகத்தில் நம்மைப் பிரித்தாள்தல், சாதியம், பிரதேசவாதம் போன்ற சகதிக்குள் எம்மைச் சிக்க வைத்து ஒற்றுமையை உடைத்தார்கள் . அதேபோன்று புலம்பெயர் நாடுகளில் நோக்கமற்ற பல அமைப்புகளை உருவாக்கி யாரையுமே பணி செய்ய விடாமல் எமது மக்களின் உழைப்பையும் நேரத்தையும் வீணாக்கி கால நீட்சியில் நாம் ஒன்றுபடாமல் அழிந்து போவதற்கான அத்தனை புறச் சூழலையும் உருவாக்கி இருக்கின்றார்கள். கூடிவாழ்தலின் அகத்தியத்தை மக்கள் புரிந்து கொள்ளும்


Registered office address: 162 Franciscan Road, London SW17 8HH
Company Reg No: 09147012

வகையில் கருத்துக்களை உள்வாங்கி நாடகத் தமிழில் வெளிக்கொணர வேண்டும்.

**நாடகம் ( 13-17 அகவை) (01/09/2011 – 31/08/2009)**

### 1. தாய்மொழியைக் கற்காத தலைமுறையின் எதிர்காலம்

தாய்மொழி என்பது தலைமுறை, தலைமுறையாக எமது நிறமூர்த்தத்தில் பதிவாகியுள்ள தமிழ் மொழி.

நாம் எங்கு வாழ்ந்தாலும் எந்த மொழியில் கற்றாலும் எமது தாய்மொழி தமிழ்தான். அதில் எந்த மாற்றுக்கருத்திற்குமிடமில்லை. நாம் பேசும் மொழியும் உண்ணும் உணவும் எமது பண்பாட்டை மாற்றும், பண்பாடு மாறினால் கலாச்சாரம் மாறும். இவ்வாறான மாற்றங்கள் நிகழும் போது எமது வாழ்வியல் விழுமியங்களை இழக்க நேரிடும். வாழிடக் கல்வி பொருளாதாரத்தை நோக்கியது.

தாய்மொழிக் கல்வி எமது இனத்தை நோக்கியது. எமது வாயில் இருந்து வரும் மொழிதான் நாம் யார் என்று அடையாளப்படுத்தி எமக்கான முகவரியைக் கொடுக்கும்.

தாய் மொழியை கற்காத தலைமுறை தனது முகவரியை முதலில் தொலைக்கும். தமிழின வரலாறு நமது இலக்கியங்களிலும் நெறி நூல்களிலுமே பெரும்பாலும் பொதிந்து உள்ளது. அவற்றை கற்க முடியாத புறச்சூழல் உருவாகும் போது தமது வேரைத் தேடி ஓட மாட்டார்கள். வாழிட மொழி மோகத்தில் தம்மை மறந்து தாம் சார்ந்த இனம் அழிவதற்கு கரணியம் ஆகி விடுவார்கள். ஒரு இனம் பாரம்பரிய தொடர் நிலங்களை இழக்கலாம். என்றோ ஒரு நாள், அதை ஒரு தலைமுறை மீட்டெடுக்கும். ஆனால், தாய்மொழியை இழந்தால் மீட்சியே கிடையாது. அந்த இனம் காணாமல் போய்விடும். நாமும் அவ்வாறான ஒரு இனமாக இருக்கக் கூடாது. இவ் அடிப்படைக் கருத்துகளை உள்வாங்கி நாடகத் தமிழில் வெளிப்படுத்த வேண்டும்.

020 8432 6999
07771 753525
admin@tedc.org.uk
www.tedc.org.uk

### 2. அகிம்சைத் தாய்

புறநானூற்றுத் தாயின் வீரத்தை படித்திருப்போம். ஆனால் அவ்வீரத்தை விஞ்சிய தாயாக, தன் நிலத்திற்கும் மக்களுக்கும் ஏற்பட்டிருந்த நெருக்கடிச் சூழ்நிலையைக் கருதி, தன் பிள்ளைகளை எதிர் பாராது தானே போராட சித்தமாகி அகிம்சை வழியில் இறுதிவரை நின்று வீரமரணம் அடைந்தவர் அன்னை பூபதி அவர்கள் . அந்தத் தாயின் நெஞ்சுரத்தையும் தியாகத்தின் மகத்துவத்தையும், அறப்போரின் புனிதத்துவத்தையும் விளக்குவதோடு, இந்தியதேச இராணுவம் தமிழீழத் தேசத்தின் மீது கொண்டிருந்த ஆதிக்க அடக்குமுறையை அகற்ற எவ்வாறு போராடினர் என்பதை வாழிடச் சிறார்கள் விளங்கும் வகையில் இந்நாடகம் அமைதல் வேண்டும்.

### 3. செம்மணிப் புதைகுழி

தமிழீழத் தேச விடுதலைக்காக மக்கள் சிந்திய குருதி எக்காலத்திலும் மறக்கமுடியாத நிகழ்வாகும். ஆனால் அம்மக்களின் வீரத்தையும் தீரத்தையும் அடக்கி ஒடுக்க சிங்கள, இந்திய அரசுகள் மேற்கொண்ட அரசபயங்கரவாதம் மிகக் கொடியது.
தமிழீழத் தேசத்து மண் விடுதலைக்காக ஓடிய குருதியில் செந்நிறமாய் தோன்றினாலும், அப்பாவி மக்களின் படுகொலையாலும் செந்நிறமானது. செம்மணிப் புதைகுழி என்றால் யாரும் மறுப்பதற்கில்லை. அதிலும் மாணவி கிரிசாந்தியின் படுகொலை தமிழர் தேசத்தை உலுக்கிய பெருந்துயராகும். இத்துயரை வாழிட சிறார்கள் விளங்கிக் கொள்ளும் வகையில் நாடகமாக நடித்தல் வேண்டும்.


Registered office address: 162 Franciscan Road, London SW17 8HH
Company Reg No: 09147012

020 8432 6999
07771 753525
admin@tedc.org.uk
www.tedc.org.uk

### 4. விழுப்புண் அடைந்த (அவயங்கள் இழந்த) மறவனின் வாழ்வு

நவம் அறிவுக்கூடம் (லெப். கேணல் நவம் அவர்களின் ஞாபகார்த்தமாக) தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களினால் உருவாக்கப்பட்டது. இது தாயக மீட்புப் போரிலே அங்கவீனமான போராளிகளைப் பேணிப் பாதுகாக்க உருவாக்கப்பட்டு, புனிதமாகப் பராமரிக்கப்பட்டு வந்ததமை குறிப்பிடத்தக்கது. நாலாங்கட்ட ஈழப்போரின் பின்னர் இவ்வாறான விழுப்புண் அடைந்த பல போராளிகளின் நிலை மிகவும் கவலை தரும் நிகழ்வாக தற்பொழுது உள்ளது. அவர்கள் தம் ஒருநாள் வாழ்வைக் கழிக்க எதிர்கொள்ளும் தடைகளையும், அதை நிவர்த்தி செய்ய வாழிடத்தேசத் தமிழர்களாகிய நாம் எவ்வாறான முயற்சிகளை மேற்கொண்டு அவ்விழுப்புண் அடைந்த மறவனின் வாழ்வில் வசந்தம் வீச வழிவகுப்போம் என்பதை விளக்குவதாக இந்நாடகம் அமைதல் வேண்டும்.

### 5. வயோதிபப் பெற்றோரின் ஏக்கப் பெருமூச்சு

தமிழீழத் தேசத்தில் முனைப்புக் கொண்ட இன வன்முறையின் போது, தமது பிள்ளைகள் எங்காவது சென்று உயிரோடு வாழட்டும் எனும் மனநிம்மதியில் பல்வேறு நாடுகளுக்குத் தமது பிள்ளைகளைப் பல பெற்றோர்கள் அனுப்பிவிட்டு கொஞ்சம் ஆறுதல் வாழ்வை வாழ்ந்தனர். அந்தப் பிள்ளைகள் பல மேலைத்தேய நாடுகளில் குடியேறி தமது உழைப்பால் முன்னேறி அந்நாட்டு மக்களாக மாறிய வாழ்வை மகிழ்வோடு வாழ்கின்றனர். இருப்பினும் தமிழீழத்தில் உள்ள பெற்றோர் முதுமை நிலை அடைந்த காரணத்தினால் அவர்களால் துணையின்றி வாழ முடியாத சூழலில் தவிக்கின்றனர்.

தொழிநுட்ப உதவியோடு தம் பிள்ளைகளுடன் பார்த்துப் பேசினாலும் "தூரத்துத் தண்ணீர் ஆபத்துக்கு உதவாது" என்ற ஏக்கம் அவர்களை வாட்டி வதைக்கின்றது. இந்தக் கருத்தை அடிப்படையாக கொண்டு இந்நாடகம் அமைதல் வேண்டும்.


Registered office address: 162 Franciscan Road, London SW17 8HH
Company Reg No: 09147012

## பழைய மாணவர்கள் நாடகம்: 17 - 25 அகவை (01/09/2008 இற்கு முன் பிறந்தவர்கள் )

### 1. தியாக தீபம்:

இந்திய வல்லரசு தமிழீழ விடுதலைப் புலிகளின் போர்க்கருவிகளை பறிமுதல் செய்ததோடு மட்டுமின்றி, அவர்களின் போராட்டத்தை நீர்த்துப்போகச் செய்யும் அனைத்து வேலைகளிலும் ரகசியமாக செயற்பட்டது. மேலும் தமிழ் மக்களது சுதந்திர வாழ்வுக்கு எவ்வித உறுதிமொழியும் கொடுக்காது மாறாக தமிழின எதிரிகளை வலுப்படுத்தும் செயற் திட்டத்தில் முனைப்போடு செயற்பட்டது.

இத்தகைய அதிபயங்கர தருணத்தில் இந்திய தேசத்தின் முகத்திரையை கிழிக்கவென அக்கினிக் குஞ்சாய் புறப்பட்ட வீரனே தியாக தீபம் திலீபன் அவர்கள். அவரின் வாழ்க்கை வரலாறு, அவரின் அகிம்சைப் போராட்டம், அதனால் தமிழ் மக்கள் எவ்வாறான மாற்றத்தை அடைந்தனர் என்பவனவற்றை விளக்குவதாக இந்நாடகம் அமைதல் வேண்டும்

### 2. வெறுமையாகும் தாயகம்

ஒரு தேசிய இனத்தின் ஆணி வேர் பாரம்பரிய தொடர் நிலமாகும். தமிழீழத் தமிழர்களின் பாரம்பரிய தொடர் நிலமான வடக்கும் கிழக்கும் இணைந்ததுதான் தமிழீழத் தாயகம்.

எமது பாரம்பரிய நிலங்களில் இருந்து நம்மினச் சொந்தங்களைத் திட்டமிட்ட முறையில் இலங்கை அரசாங்கம் வெளியேற்றி வருகிறது.

யுத்த காலத்தில் தமிழ் மக்கள் கொத்துக்கொத்தாக கொல்லப்பட்ட அதேநேரம் கொத்துக்கொத்தாக வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்து வாழ்ந்து வருகிறோம்.

இப் புலம்பெயர்வானது தவிர்க்க முடியாத ஒன்றாக அமைந்தது. புலம்பெயர்வு தான் நம் இனத்தை இன்று வரை வாழ வைத்துக் கொண்டிருக்கின்றது.

020 8432 6999
07771 753525
admin@tedc.org.uk
www.tedc.org.uk

ஆனால் 2009 ஆம் ஆண்டு தமிழின அழிப்பின் உச்ச நாளின் பின்னரும் தாயகப் போராட்டத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் வாழ முடியாத நிலை இருந்தது. அதனால் அவர்களும் புலம்பெயர்ந்தார்கள். இது தவிர்க்க முடியாத ஒன்று. இன்றைய காலகட்டத்தில் எமது இனம் விழிப்புணர்வற்று, தாயகத்தில் முயற்சிகள் செய்யாமல், தம்மைத் தாமே வளப்படுத்தாமல், எதிரிகளால் திட்டமிட்டு பரப்பப்படும் வெளிநாட்டு மோகத்தினால், எமது உழைக்கும் சமூகம் நமது இனத்தின் எதிர்காலத்தை யோசிக்காமல், இருக்கின்ற வளங்களை எல்லாம் வீணடித்துப் புலம்பெயர்ந்து வந்து அல்லல்பட்டு கொண்டிருக்கின்றார்கள்.

எமது இனம் மிகச் சிறிய இனம். இவ்வாறு பெரும்பாலான மக்கள் வெளியேறி விட்டால் தாயகத்தில் நமது நிலம் வெறுமையாகி விடும். இதனாலேயே திட்டமிட்ட குடியேற்றங்கள், நில அபகரிப்புகள், பௌத்த சிங்கள மயமாதல், வியாபார இழப்பு, மொழித் திணிப்பு போன்ற வரலாற்றுத் துன்பியல் சம்பவங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இந்நிலை தொடருமானால் எமது தாயகம் இத்தலைமுறையின் காலத்திலேயே பறி போய்விடும். ஆகவே புலம்பெயர் தேசத்து உறவுகளே! உழைக்கும் சமூகத்தைத் தாயகத்திலேயே வளப்படுத்துங்கள்! அவர்களைத் தொழில் முனைவோர் ஆக்குங்கள்! அவர்கள் புலம்பெயர்வதற்கான செலவில் மிகச் சிறந்த முறையில் கைத்தொழில்களை உருவாக்கிக் கொடுக்க முடியும் என்பதை மறந்துவிடாதீர்கள்! எமது தாயகம் வெறுமையாகி கொண்டிருக்கின்றது.

இவ்வடிப்படைக் கருவை உள்வாங்கி நாடகத்தமிழில் வெளிப்படுத்த வேண்டும்.


Registered office address: 162 Franciscan Road, London SW17 8HH
Company Reg No: 09147012

020 8432 6999
07771 753525
admin@tedc.org.uk
www.tedc.org.uk

### 3. சிறையில் வதைபடும் அப்பாவித் தமிழர்கள்

உலகெங்கும் மனிதன் செய்த மன்னிக்க முடியாத செயலைக் கட்டுப்படுத்த சிறு தண்டனைக்காக சிறைகள் உருவாக்கப்பட்டன. இதை உலக மக்களும் ஏற்றுக் கொண்டே பயணிக்கின்றனர். ஆனால் செய்யாத பல குற்றச் சுமைகளைத் தாங்கியும், மிக கொடூரமான தண்டனை அனுபவித்தும் ஓரினம் கடந்த அறுபது வருடத்திற்கு மேலாக வாழ்கின்றது என்றால் அது தமிழினமே ஆகும்.

சிங்கள பௌத்த அரச இயந்திரத்தின் கண்மூடித்தனமான தாக்குதலுக்கு உட்பட்டு, சிறைப்பட்டு மீளமுடியாத துன்பத்தில் உழன்று, தம் வாழ்நாளை சிறையிலே முடித்த பல சம்பவங்கள் நம் எல்லோருக்கும் விழிநீர் கசியும் ஆற்றுப்படுத்த முடியாத நிகழ்வாகும். அவ்வாறான பல சந்தர்ப்பங்களில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து நாடகமாக காட்சிப்படுத்தல் வேண்டும்

### 4. மறைக்கப்படும் தமிழர் தொன்மங்கள்

தமிழர்களின் தொன்மங்களான யாழ்நூலக அழிப்பு, அவர்களது வழிபாட்டு தலங்கள் அபகரிப்பு, துயிலுமில்லங்கள் உடைத்தல் மற்றும் நினைவுச் சின்னங்கள் தகர்ப்பு யாவும் தமிழினத்தின் தொன்மையை மூடி மறைக்கும் செயல்வடிவாகும். இவற்றுள் ஏதாவது ஒன்றை அல்லது பலவற்றை நினைவுபடுத்தி அவை தமிழினத்தின் தொன்மப் படிமங்கள், அவை தமிழினம் காலங் காலமாக பேணிய வணங்கிய முதுசங்கள் என்பதை விளக்குவதாக இந்த நாடகம் அமைதல் வேண்டும்.


Registered office address: 162 Franciscan Road, London SW17 8HH
Company Reg No: 09147012

### 5. மாவீரர் கல்லறையில் ஒரு சபதம்

எமது வீரம் செறிந்த போராட்ட வரலாற்றுக்குச் சான்றாக இருப்பவர்கள் எம் மாவீரர்கள். அம்மாவீரர்கள் எம்தேச விடுதலை என்ற உயரிய நோக்குடன் தம் உயிரினைத் தியாகம் செய்தவர்கள். அந்த மாவீரர்களின் தியாகம் வீணாகிவிடக் கூடாது. அந்த உயரிய இலட்சியத்தை நோக்கிய பயணம் சாத்தியமான வழிகளில் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டும் கனவுத் தேசத்தை நனவாக்குவோம் என்று நாம் அவர்களது கல்லறையில் சபதம் எடுப்போம் என்ற கருப்பொருளாக இருத்தல் வேண்டும்.

## தெருக்கூத்து ( அகவைக் கட்டுப்பாடு இல்லை)

### 1. தமிழ் படிக்க (கற்க) நேரமில்லை

தாய் மொழியைக் கற்பது என்பது மிக எளிமையான விடயம், குழந்தைகள் பிறந்து மூன்று அகவை வரை பெற்றோருடன் தான் முழுமையாக வாழ்கிறார்கள் பெற்றோர் தாய்மொழியில் மட்டும் கதைத்தால் பிள்ளைகளுக்கு தாய் மொழியின் அடிப்படை புரிந்துவிடும்.
பள்ளிக்குச் செல்ல ஆரம்பித்தவுடன் பிள்ளைகள் ஆங்கிலம் கற்பதற்கு கடினமாக இருக்கும் என்ற ஒரு தவறான புரிதலால் ஆங்கிலத்தில் பிள்ளைகளுடன் கதைத்து மிகப்பெரிய தவறு இழைக்கிறோம். நான்கு வயதில் பிள்ளைகளை தமிழ்ப் பள்ளிகளுக்கு அனுப்ப ஊக்கம் கொடுக்க வேண்டும்.
11+ போன்ற தேர்வுகளுக்கு முற்கூட்டியே அணியம் செய்தால் தமிழ் கற்க நிறைய நேரம் கிடைக்கும்.
குமுகாயத்திற்காக பல கலை வகுப்புகளுக்கும் வியாபார நோக்குடன் நடாத்தப்படும் தேவையற்ற போட்டிகளுக்கும் சிறியசிறிய அமைப்புகளால் நடாத்தப்படும் விளையாட்டுகள், களியாட்டங்கள் போன்ற நிகழ்வுகளால் பெற்றோர் மற்றும் பிள்ளைகளின் நேரங்கள் திருடப்படுகிறது.
இவற்றால் ஏற்படும் சலிப்புத் தன்மை தமிழ் கற்க நேரமில்லை என்ற ஒரு சாட்டுப் போக்கிற்குள் கொண்டு செல்கிறது. ஒட்டுமொத்தத்தில் தேவையானவற்றை மட்டும் தேர்ந்தெடுத்து பிள்ளைகளுக்குக் கற்பிப்பது, அத்தோடு மிக முக்கியமானது நேர மேலாண்மை.
இவ்வாறான கருத்துகளை உள்வாங்கி நாடகத் தமிழில் வெளிக் கொணர வேண்டும்.


Registered office address: 162 Franciscan Road, London SW17 8HH
Company Reg No: 09147012

## 2. ஈழம் ஒரு கனவல்ல

(எம் விடுதலைப் போராளிகளின் உயிர்த் தியாகம் என்பது வெறும் கனவாகி விடக்கூடாது)

## 3. மக்கட் புரட்சி

எல்லா வகைப் போராட்டங்களும் மக்களின் புரட்சியால் சாத்தியமான ஒன்றாகும். இருந்தும் மனிதாபிமானம் பேசுகின்ற வல்லரசுகளின் கைப்பொம்மையாக விளங்குகின்ற ஐ.நா போன்ற அமைப்புகள் புகழுக்கும் பெருமைக்கும் சில நிகழ்ச்சி நிரலைத் தயாரித்துப் போராடும் மக்களை ஒடுக்குகின்றனவே தவிர, பாதிக்கப்பட்ட மக்களின் கண்ணீரைத் துடைக்க இதுவரை முன்னின்றதில்லை.

போராடும் மக்களின் வேகத்தை தடைசெய்து, அவர்களை மடைமாற்றும் வேலைகளைச் செய்யும் ஒரு அருவருப்பான செயலை மாத்திரமே இந்த அமைப்புகள் செய்து வந்ததை நாம் முள்ளிவாய்கால் இனப்படுகொலையின் மூலம் கற்றுக்கொண்ட துயரமாகும். எனவே இவ்வாறான செயல்களை கண்டிக்கும் வகையிலும், தீர்வுகளற்ற பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுத்தருவதாக மக்கட்புரட்சியை விளக்கும் ஒரு நிகழ்வை வலியுறுத்துவதாக இந்நாடகம் அமைதல் வேண்டும்.

### 4. போதை அடிமைகள்:

நல்ல தலைவன் இல்லாத குமுகாயத்தை எவ்வழியிலும் திசைமாற்றம் செய்ய முடியும் என்பதன் வெளிப்பாட்டை தமிழீழ தேசத்தில் தற்போது காணமுடிகின்றது. தமிழீழ அரசு நிழலரசு இருந்த காலத்தில் போதைப் பொருள் பாவனை சிறிதளவும் இல்லை என்பதே சிறப்பு. ஆனால் போரில் நம் பலங்குன்ற, சர்வதேச நாடுகளின் சதிவலையில் நாம் வீழ்ந்தோம். அதன் பலனாக நம்மில் பலர் தமிழர் ஒழுக்கம் சாராத செயல்களில் ஈடுபட நிர்ப்பந்திக்கப்பட்டோம்.

போதைப் பொருளுக்கு அடிமையாகி, அப்பழக்கத்தில் கட்டுண்டு, அப்போதைப் பொருளை வாங்க மென்மேலும் குற்றங்களை செய்யும் நிலைக்கு உந்தப்பட்டு இருக்கின்றோம். இந்நிலை ஆரோக்கியமானதல்ல. நாம் நல்ல பண்பாட்டைக் கொண்ட மறவர் குலம் என்பதை விளக்கும் முகமாக இந்நாடகம் அமைதல் வேண்டும்.

### 5. புனர்வாழ்வுப் போராளிகள்

நாலாங்கட்ட இறுதிப் போரில் துரோக வாள்கள் எமது வீரத்தைக் கூறுபோட்டன. பல நாடுகளின் கூட்டு முயற்சியால் தமிழர் வீரமும், தமிழீழத் தேசமும் சூறையாடப்பட்டன. இதன்போது பல மறவர்கள் வீரமரணம் அடைந்தாலும், ஒருசில மறவர்கள் சரணாகதி நிலைக்குத் தள்ளப்பட்டனர்.
சரணாகதி நிலைக்கு உள்ளான பலர் காணாமல் ஆக்கப்பட்டாலும், சிலர் புனர்வாழ்வு எனும் செயற்திட்டத்தில் அவர்களை மெல்லக் கொல்லும் விடம் ஏற்றி வதைத்தமை குறிப்பிடத்தக்கது. புனர்வாழ்வு வழங்கிய பின்னர் இதுவரை இருநூற்றுக்கும் மேற்பட்ட வீரமறவர்கள் என்ன காரணமும் இன்றி இறந்துள்ளனர். இன்னும் சிலரது வாழ்வு கவலைக்கிடமாகவே உள்ளது. இத்துயர நிலை பலருக்கு புரிவதில்லை. இத்துயரத்தின் வெளிப்பாடாக இந்நாடகம் அமைதல் வேண்டும்.